**செய்தி வெளியீடு எண் : 24** **நாள்: 14.06.2025**

## ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு – செய்திக்குறிப்பு

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, அவர்கள் "ஆளுநரின் "எண்ணித் துணிக" பகுதி – 18: உலக தமிழ் ஆளுமைகளுடன் கலந்துரையாடல்" நிகழ்ச்சியில் ஆற்றிய உரை,**

" தமிழ் தாய்க்காக அர்ப்பணிப்புடன் சேவை புரிந்த எல்லா மாண்புமிகு அறிஞர்களையும் — தங்களின் ஆய்வுகள், பதிப்புகள் மற்றும் பாராட்டு நிகழ்வுகள் மூலம் — நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். தமிழ், உலகின் மிகப் பழமையான வாழும் மொழி, மேலும் இலக்கியத் தன்மை மிகுந்த மொழியாகும். இந்த மொழியை 100 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பேசுகின்றனர். பெருமை கொள்ளும் ஆளுமை கொண்டது. பாரதம் தமிழைப் பெருமையாகக் கருதுகிறது.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இந்த தொன்மைமிக்க தமிழ் மொழி பல்வேறு துன்பங்களைச் சந்தித்தது. தாய்மொழிகளை அழிக்கும்படி ஆங்கிலேயர் திட்டமிட்ட முயற்சிகளை மேற்கொண்டனர். அவர்கள் நாட்டின் பாரம்பரிய கல்வியையும், தொழில்துறையையும் அழித்தனர். விவசாயத்துக்கு மிகுந்த வரிகள் விதித்து, விவசாயிகள் வாழ முடியாத நிலையை ஏற்படுத்தினர். பல தொழில்கள் மூடப்பட்டன. இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் வேலை தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆங்கிலக் கல்வி அவர்களுக்கு அவசியமானதாக மாறியது. புதிய கல்வி முறை மூலம் பள்ளிகளில் தமிழை பொருட்படுத்தவே இல்லை. அந்த கல்வி முறையின் மூலம், ஆங்கிலேயர்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தையே விதைத்தனர்.

மொழி என்பது வெறும் தொடர்பு கொள்ளும் கருவி அல்ல — அது பண்பாட்டு அடையாளம். அப்போது அரசு மாவட்ட ஆட்சியர்களிடம் ஒரு விரிவான அறிக்கையைத் தயாரிக்கச் சொன்னது. அந்த அறிக்கையில் மாணவர்கள் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டனர்: பிராமணர், வைசியர், சூத்திரர் முதலியன ஆகும். பெரும்பாலான பள்ளிகளில் சூத்திர மாணவர்கள்தான் அதிகம் இருந்தனர். அந்நேரம் வரை 'தாழ்த்தப்பட்ட' என்ற பார்வை இல்லை. ஆனால் ஆங்கிலேயர்களே சமூகத்தில் தாழ்வுணர்வை ஊட்டி விட்டனர்.

முதல் உலகப்போருக்குப் பிறகு, 1920களில், அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்களில் ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினர். அந்தச் சூழலில் சுதேசி இயக்கம் உருவாகியது. அது மொழி வளர்ச்சிக்கே சென்றது — குறிப்பாக தமிழுக்கு. பல சக்திவாய்ந்த எழுத்தாளர்கள் அப்போது உருவாகினர். டி.கே. சிதம்பரநாத முதலியார் தமிழுக்காக தீவிரமாகப் போராடியவர். "ஆங்கிலேயர் வாழைப்பழத்தைப் பார்த்து அதை எப்படிச் சாப்பிட வேண்டும் என்பதையும் அறியாமல் இருந்தார்கள்" என்ற கூறுவது பொதுவாக பேசப்பட்டது!

எல்லா தாய்மொழிகளும் இதயத்தில் இருந்து பிறக்கின்றன. "கம்பன் தமிழின் இதயத் துடிப்பை அறிந்தவர்" என்று டிகேசி சொல்வார். ஒரு வார்த்தையைத் தொடர்ந்து வாசிக்கும்போது, அந்த மொழியின் துடிப்பையே நீங்கள் உணர முடியும். அது இதயத்தில் வாழும் மொழி. தமிழ் சமூகம் ஆர்வமுள்ள, கலாசாரப் பண்பாடுடன் கூடியதாக இருந்தது. தமிழ்தாத்தா உ.வே.சாமிநாதையர் பல தொன்மை நூல்களை மீட்டுக் கண்டுபிடித்து, பின்தலைமுறைகளுக்காக வழங்கினார். பாரதி தமிழ் மொழியின் உண்மையான வீரம் செரிந்த உருவமாக இருந்தார். கல்கி கிருஷ்ணமூர்த்தி ஒரு சிறந்த சுதந்திரப் போராளியும், தமிழுக்காக பாடுபட்டவரும் ஆவார். ஜெகநாதன்,

வினாயகம் பிள்ளை, டி.எஸ்.ரங்கராஜன் ஆகியோர் தமிழருவி நவீன இயக்கத்தின் வழியில் சென்றவர்கள். சுதந்திரத்துக்குப் பிறகு, அந்த இயக்கம் சில காலம் தொடர்ந்தது. ஆனால் பின்னர், அது மந்தமடைந்தது.

ஆங்கிலேயர்கள், அறிவியல் போன்ற பாடங்களை ஆங்கிலத்தில் மட்டுமே கற்றல் சாத்தியமென பரப்பினர். தமிழ் அறிவியல் மொழியாக இருக்க சாத்தியமில்லை என்று பரப்பினர். அப்போது பாரதி தன்னுடைய கடுமையான எதிர்வாதத்தை முன்வைத்தார். ஆனால், அவர் சொன்னதை நாம் இன்னும் முழுமையாக நிறைவேற்றவில்லை. இன்று சிலர் தமிழ் இலக்கியத்தையும் ஆங்கில இலக்கியத்தையும் ஒப்பிட முயற்சிக்கிறார்கள். எனக்கு இது அதிர்ச்சியாக உள்ளது. திருவள்ளுவரை ஷேக்ஸ்பியருடன் ஒப்பிட முடியாது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

2023 ஆம் ஆண்டு, நான் தமிழைக் கற்கத் தொடங்கியபோது, பொறியியல் மற்றும் மருத்துவப் பாடநூல்களை தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமெனப் பேராசிரியர்களிடம் பரிந்துரை செய்தேன். நாம் மகாகவி பாரதியாரைத் தவறவிடக் கூடாது. தமிழ் மொழியின் பாரம்பரியம், அதேபோன்று தொடர வேண்டும்.

இன்றும் பலர் ஆங்கிலம் சிறந்தது என்ற எண்ணத்தில் உள்ளனர். இது மாற வேண்டும். ஒவ்வொருவரும் தம் தாய்மொழிக்குப் பெருமை சேர்க்க வேண்டும். பிற மொழிகளை அறிதல் தவறு அல்ல, ஆனால் தாய்மொழியையே முதன்மையாக மதிக்க வேண்டும். பாரதத்தின் அழகு என்னவென்றால், இங்கு பல தாய்மொழிகள் உள்ளன. ஒவ்வொரு மொழியும் மலர வேண்டும். தமிழ் வழிகாட்டியாக இருக்க வேண்டும். நாம் உலகம் முழுவதும் தமிழைக் கற்பிக்க ஊக்குவித்து வருகிறோம்.

வடகிழக்கு மாநிலங்களிலும் தமிழைப் கொண்டுச்சென்றுள்ளோம். அங்கிருந்து இளைஞர்கள் தமிழ்நாட்டுக்குப் பணி தேடி வருகின்றனர்.

பாரதம் ஜனநாயகத்தின் தாயகம். தமிழ் மொழியின் பெருமை உச்சத்திற்கு செல்வது அவசியம். தேசியக் கல்விக் கொள்கை தாய்மொழி முக்கியத்துவம் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் கற்றுக் கொள்ளுங்கள் — ஆனால் அதை மேன்மையான மொழியாக கருத வேண்டாம். தாய்மொழியில் கற்றல் எளிதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். நாம் தமிழைப் பொழுதுபோக்காக அல்ல, உலக அளவில் கொண்டு செல்லும் முயற்சியாக எடுத்துக் கொண்டு செயல்படுகிறோம். "

..........................................................................................................................................

**ஆளுநர் மாளிகை, சென்னை-22**
**நாள்: 14.06.2025**

**வெளியீடு :-**
**மக்கள் தொடர்பு அலுவலகம்**